# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க,
# இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டம்

---

*[1984 சனவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, சனவரி மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை: ரூபா 1.85* *தபாற் செலவு: ரூபா 1.80*

# 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டம்

[1984, சனவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 30/80
1449

**இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், 1964 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, இலங்கைக் கட்டளைகள் பணியகச் சட்டத்தை நீக்குவதற்கும், அத்துடன் அவற்றோடு தொடர்புடையவையும் அவற்றின் இடைநேர்விளைவானவையுமான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

## பாகம் I

## இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தைத் தாபித்தலும் அதன் குறிக்கோள்களும் தத்துவங்களும்

2. (1) இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் என்றழைக்கப்படவேண்டிய நிறுவனம் ஒன்று தாபிக்கப்படல் வேண்டும்; இது இதனகத்துப் பின்னர் " நிறுவனம் " எனக் குறிப்பீடு செய்யப்படும். இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தைத் தாபித்தல்.

(2) நிறுவனம், (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரினால் இடையறா வழியுரிமையையும் ஒரு பொது இலச்சினையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும்; அத்துடன் அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் அது வழக்குத் தொடரலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்.

3. நிறுவனத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :— நிறுவனத்தின் குறிக்கோள்.

(அ) அமைப்புகள், விற்பனைப்பொருட்கள், விளையுள்கள், பொருட்கூறுகள், வழக்காறுகள், தொழிற்பாடுகள் என்பன தொடர்பாக தேசிய அடிப்படையிலும், சர்வதேச அடிப்படையிலும் நியமங்களைத் தயாரித்தலும், அவற்றைக் காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்தலும் மாற்றுதலும் திருத்தலும் அத்துடன் அத்தகைய நியமங்களின் பொதுவான கடைப்பிடிப்பை மேம்படுத்தலும்;

(ஆ) கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் தரப்படுத்தலையும் தரக்கட்டுப்பாட்டையும் மேம்படுத்தல்;

(இ) தரப்படுத்தும் வழக்காறையும் தரக்கட்டுப்பாட்டு வழக்காறையும் முன்னேற்றும் நோக்கத்திற்காக ஆய்வுகூடங்களையும் வாசிகசாலைகளையும் தாபித்தலும் பேணுதலும் அத்துடன் அவற்றிற்கு இயைபான வசதிகளை ஏற்பாடுசெய்து கொடுத்தலும்;

(ஈ) 1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, புலமைச்சொத்துச் சட்டக் கோவைச் சட்டத்துடன் அல்லது தாநியமங்களுடன் சம்பந்தப்பட்ட வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்துடன் இணங்கி யொழுகுகின்றனவா, அல்லவா என்பதைத் தீர்மானிப்பதற்காக உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்

பட்ட உணவும் ஔடதங்களும் உட்பட விளையுள்களையும், விற்பனைப் பொருட்களையும், பொருட்கூறுகளையும் பரிசோதனை செய்து பரீட்சிப்பதற்கும், அத்துடன் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட விளையுள்களினதும் விற்பனைப்பொருட்களினதும் பொருட்கூறுகளினதும் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் படிமுறைகளையும் வழக்காறுகளையும் பரிசோதனை செய்வதற்கும் ஆன ஒழுங்குகளைச் செய்தலும் அல்லது வசதிகளை ஏற்பாடு செய்தலும் ;

(ஊ) திடக் கருவிகளையும், தேர்வுமூல அளவைகளையும் அறிவியல் உபகரணங்களையும் சோதனை செய்வதற்காகவும் தரம்பார்ப்பதற்காகவும் தேவைப்படுத்தப்பட்ட நியமங்களுடன் இணங்கியொழுகுமாறு அவை தொடர்பிலான சான்றிதழ்களை வழங்குவதற்காகவும் ஒழுங்குகள் செய்தலும் வசதிகளை ஏற்பாடு செய்தலும் ;

(ஊ) தரப்படுத்தலுடனும் தரக்கட்டுப்பாட்டுடனும் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியைப் பொறுப்பேற்றலுக்காக வசதிகளை ஏற்பாடு செய்தல் அல்லது ஒழுங்குசெய்தல் ;

(எ) இச்சட்டத்தின் இயைபான ஏற்பாடுகளுக்கிணங்க சான்றுப்படுத்தும் குறிகள் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல் ;

(ஏ) உள்ளூர் பாவனைக்காகவோ அல்லது ஏற்றுமதிக்காகவோ உள்ள விற்பனைப்பொருட்களினதும், பொருட்கூறுகளினதும், தயாரிப்புக்களினதும், விளையுள்களினதும், வேறு சாமான்களினதும் தரத்தைச் சான்றுபடுத்துதல் ;

(ஐ) கல்வி வழியாக, கலந்தாலோசனை வழியாக அல்லது வேறு வழியாக தரப்படுத்தலையும் தரக்கட்டுப்பாட்டையும் ஊக்குவித்தலும் மேம்படுத்துதலும் ;

(ஒ) நிறுவனம் எக்குறிக்கோள்களுக்காக தாபிக்கப்பட்டதோ அக்குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடைய, இலங்கைக்கு வெளியே உள்ள எவரேனும் ஆளுடன், அல்லது ஏதேனும் கழகத்துடன் அல்லது ஒழுங்கமைப்புடன் ஒத்துழைப்புக்கு ஏற்பாடு செய்தல் ; அத்துடன்

(ஓ) விற்பனைப்பொருட்களினதும் பொருட்கூறுகளினதும், விளையுள்களினதும், துணைக்கருவிகளினதும், படிமுறைகளினதும், முறைகளினதும் சீர்திருத்தத்திற்காக தயாரிப்பாளர்களினதும் பயன்படுத்துபவர்களினதும் முயற்சிகளை ஒருங்கிணைத்தல்.

நிறுவனத்தின் தத்துவங்கள்.

4. நிறுவனமானது பின்வரும் தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையேனும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவற்றைப் பிரயோகிக்கவும் செய்யலாம் :—

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை, எத்தகையதுமான ஏதேனும் முறையில் கொள்ளலும், வைத்திருத்தலும், குத்தகைக்கு அல்லது கேள்வுக்கு எடுத்தலும் அல்லது கொடுத்தலும், ஈடுவைத்தலும், அடைவுவைத்தலும், விற்பனை செய்தலும் அல்லது வேறு வகையாகக் கையுதிர்த்தலும் ;

(ஆ) ஏதேனும் புத்தமைப்பு அல்லது கண்டுபிடிப்புப் பற்றிய தகவலைப் பயன்படுத்துவதற்கெனப் புறநீங்கலான, புறநீங்கலற்ற அல்லது வரையறுக்கப்பட்ட உரிமைகளை அளிக்கின்ற எவையேனும் ஆக்கவுரிமைகளுக்கு, நன்மதிப்புப் பதவிகளுக்கு, புத்தமைப்புகளுக்கு, சலுகைகளுக்கு, உரிமங்களுக்கு அத்துடன் அவைபோன்றவற்றுக்கு விண்ணப்பித்தலும், அவற்றைக் கொள்வனவு செய்தலும், சாட்டுதல்மூலம் பெறுதலும், வேறுவகையாகக் கொள்ளுதல் தொடர்பில் அப்போதைக்கு ஏற்புடையனவாகவிருக்கும் சட்டங்களுக்கிணங்க அவ்வாறு செய்தலும், அத்துடன் அவ்வாறு கொள்ளப்பட்ட ஆதனத்தையும் பெறப்பட்ட உரிமைகளையும் தகவலையும் விருத்தி செய்தலும், பயன்படுத்துதலும், பிரயோகித்தலும், சாட்டுதல் செய்தலும், கைமாற்றுதலும், விற்பனை செய்தலும், அவை தொடர்பில் உரிமங்களை அளித்தலும் அல்லது அவற்றை வேறுவகையாகக் கணக்கிற்கெடுத்தலும் ;

(இ) நிறுவனம் அதன் குறிக்கோள்களை எய்துவதற்குதந்ததாகத் தோன்றக்கூடியவாறான எவையேனும் நம்பிக்கைப் பொறுப்புகளை அல்லது ஏதேனும் முகவாண்மைத் தொழிலை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பேற்றல் ;

(ஈ) நிறுவனத்தினால் பேணப்படுபவை தவிர்ந்த வேறு ஆய்வுகூடங்களின் சேவைகளை அவற்றின் சொந்தக்காரரின் அனுமதியுடன் பயன்படுத்தலும் அத்தகைய ஆய்வுகூடங்களை நிறுவனத்தின் நோக்கத்திற்காக அங்கீகரித்தலும் ;

(உ) நிறுவனத்தின் குறிக்கோள்களுள் எவற்றிற்கேனும் உடனடியாகத் தேவைப்படாத நிறுவனத்தின் எவையேனும் பணங்களை பேரவையினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல் ;

(ஊ) ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணங்களை விதித்தல் ; அத்துடன்

(எ) நிறுவனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவையான அல்லது இடைநேர்விளைவானவையான அல்லது உகந்தவையான அத்தகைய எல்லாக் காரியங்களையும் அல்லது நிறுவனத்தின் எவையேனும் பணிகளைப் புரிவதற்கு அல்லது எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமானவையான அல்லது இடைநேர்விளைவானவையான அத்தகைய எல்லாக் காரியங்களையும் அல்லது நிறுவனத்தின் ஆதனம் எதனதும் அல்லது உரிமைகள் எவற்றினதும் பெறுமதியை அதிகரிப்பதற்கு அல்லது அவற்றை இலாபகாரமானதாக்குவதற்கு அல்லது நேரடியாக அல்லது மறைமுகமாக, கணிக்கப்பட்டவையான அத்தகைய எல்லாக் காரியங்களையும் செய்தல்.

**அமைச்சரான சிறப்பான அல்லது பொதுவான பணிப்புகள்.**

5. (1) பேரவையானது, அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும் அதன் கடமைகளைக் கொண்டு நடாத்துகையிலும் அதற்கென அமைச்சரினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பொதுவான பணிப்புகளுக்கு அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைந்ததாதல் வேண்டும் என்பதுடன் அவற்றிற்கிணங்க அது செயலாற்றுதலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர், அவரினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால், நிறுவனத்தின் செயற்பாடுகள் யாவும் அல்லது அவற்றின் எவையேனும் புலனாய்வு செய்யப்பட்டு அறிக்கை செய்யப்பட வேண்டும் என காலத்திற்குக் காலம் கட்டளை இடலாம்; அத்துடன் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன்மேல் பேரவையானது, அத்தகைய கட்டளையைக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான எல்லா வசதிகளையும் செய்துகொடுத்தல் வேண்டுமென்பதுடன், எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவுதலும் வேண்டும்.

**நிறுவனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பேரவைக்கு உரித்தாக்குதலும் பேரவையின் அமைப்பும்.**

6. நிறுவனத்தின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பதினொரு உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டிய பேரவைக்கு உரித்தாக்கப்படல் வேண்டும்; அவ்வுறுப்பினர்களுள்—

(அ) மூன்று உறுப்பினர்கள் அவர்களிலொவ்வொருவரும் அறிவியலில், வியாபாரத்தில், கைத்தொழிலில் அல்லது நிருவாகத்தில் திறமை பெற்றவரெனத் தம்மை வெளிப்படுத்திக்கொண்டவர்களாக அல்லது நிறுவனத்தின் வேலையின் ஏதேனும் அம்சம் தொடர்பாக வேறுவகையிற் சிறப்புத் தகைமை பெற்றவர்களாக விருத்தல் வேண்டும்;

(ஆ) ஓர் உறுப்பினர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன், பொதுத் திறைசேரியின் அலுவலர்களிடையேயிருந்து நியமிக்கப்பட்ட ஒருவராக இருத்தல் வேண்டும்;

(இ) ஓர் உறுப்பினர், 1981 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, இலங்கை இயற்கை மூலவளங்கள், சக்தி, அறிவியல் அதிகார சபைச் சட்டத்தின் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை இயற்கை மூல வளங்கள், சக்தி, அறிவியல் அதிகார சபையின் அலுவலர்களிடையேயிருந்து நியமிக்கப்பட்ட ஒருவராதல் வேண்டும்;

(ஈ) ஓர் உறுப்பினர் அமைச்சரது அமைச்சின் அல்லது அத்தகைய அமைச்சின் கருத்தெல்லைக்குள் வரும் திணைக்களமொன்றின் அல்லது நியதிச் சட்டமுறையான குழுவொன்றின் அலுவலர்களிடையேயிருந்து நியமிக்கப்பட்ட ஒருவராதல் வேண்டும்;

(உ) ஓர் உறுப்பினர், வியாபாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அந்த அமைச்சின் அல்லது அத்தகைய அமைச்சின் கருத்தெல்லைக்குள் வரும் திணைக்களமொன்றின் அல்லது நியதிச் சட்டமுறையான குழுவொன்றின் அலுவலர்களிடையேயிருந்து நியமிக்கப்பட்ட ஒருவராதல் வேண்டும்;

(ஊ) ஓர் உறுப்பினர், இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படவேண்டிய மூன்று ஆட்களைக்கொண்ட குழாத்திலிருந்து நியமிக்கப்பட்ட ஒருவராக இருத்தல் வேண்டும்;

(எ) ஓர் உறுப்பினர், இலங்கை அறிவியல் முன்னேற்றக் கழகத்தினால் சமர்ப்பிக்கப்படவேண்டிய மூன்று ஆட்களைக்கொண்ட குழாத்திலிருந்து நியமிக்கப்பட்ட ஒருவராக இருத்தல் வேண்டும்;

(ஏ) ஓர் உறுப்பினர், வர்த்தக, கைத்தொழில் கூட்டுமன்றத்தின் சம்மேளத்தினுல் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று ஆட்களைக்கொண்ட குழாத்திலிருந்து நியமிக்கப்பட்ட ஒருவராக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஐ) ஓர் உறுப்பினர், நிறுவனத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கின்றவரான ஆளாக இருத்தல் வேண்டும்.

(2) உறுப்பினர் ஒருவர், சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு காலப்பகுதிக்குத் தனது பதவியின் கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், அமைச்சரானவர் தவிசாளரின் விதப்புரையின்மேல் அத்தகைய காலப்பகுதியின்போது அவரது இடத்தில் செயலாற்றவென வேறு எவரேனும் ஆளை (1) ஆம் உட்பிரிவுக்கிணங்க நியமிக்கலாம்.

**பேரவையின் தவிசாளர்.**

7. (1) அமைச்சரானவர், பணிப்பாளர் தலைமைத்திபதி தவிர்ந்த, பேரவையின் உறுப்பினர்களுள் ஒருவரைப் பேரவையின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) நிறுவனத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி பேரவையின் உப தவிசாளராதல் வேண்டும். தவிசாளர் வருகை தராதிருப்பின் அல்லது தவிசாளர் பதவியில் வெற்றிடம் ஒன்றிருக்கையில் உப தவிசாளர் தவிசாளரின் கடமைகளைப் புரிதல் வேண்டும்.

**பேரவை உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படமுடியாமற் செய்யும் தகைமையீனம்.**

8. ஆளொருவர் ஒரு கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்குறிந்தவராக தீர்க்கப்பட்டிருந்து அவரது வகையறவு அல்லது வங்குறிவு முழுமையாக அல்லது பகுதியளவில் தவிர்க்கமுடியாத இழப்புகளினுல் அல்லது துரதிட்டத்தினுல் விளைந்ததெனப் பயனுடைய சான்றிதழொன்று தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினுல் அவருக்கு அளிக்கப்படாதிருப்பின் அவர் பேரவையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்.

**பேரவை உறுப்பினர்களின் பதவிக்காலம்.**

9. உப தவிசாளர் தவிர்ந்த பேரவையின் உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பினுல் பதவி விலகுவதினுல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனுல் முன்னரே தனது பதவியைவிட்டு விலகினுல் அன்றி அல்லது பதவியை வறிதாக்கினுலன்றி மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்:

ஆயின், இறக்கும், பதவியை விட்டு விலகும் அல்லது உறுப்பாண்மையிலிருந்து அகற்றப்படும் உறுப்பினர் ஒருவரின் இடத்தில் நியமிக்கப்படும் பேரவையின் உறுப்பினர் ஒருவர், அவர் எந்த உறுப்பினரை அடுத்துவருகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறுதெளுவியுள்ள பாகத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

**உப தவிசாளர் தவிர்ந்த பேரவை உறுப்பினரைப் பதவியிலிருந்தகற்றல்.**

10. அமைச்சரானவர், உபதவிசாளர் தவிர்ந்த உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அகற்றுதல் உசிதமானதெனக் கருதின் அதற்கான காரணம் எதுவும் குறிப்பிடாது, கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அவ்வாறு பதவியிலிருந்து அகற்றலாம் என்பதுடன், அத்தகைய அகற்றுகையானது நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், உறுப்பினர் எவரும் அமைச்சருடனான அல்லது ஏதேனும் அதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடன் நியமிக்கப்பட்டிருக்குமிடத்து அத்தகைய அமைச்சருடனான அல்லது அதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடனன்றி அத்தகைய உறுப்பினர் ஒருவர், இப்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்படுதலாகாது.

**மீள் நியமனத்துக்கான தகவுடைமை.**

11. காலங்கழிவதனால் பதவியை வறிதாக்கும் உபதவிசாளர் தவிர்ந்த உறுப்பினர் ஒருவர், மீள் நியமனத்திற்கு தகவுடையவராதல் வேண்டும்.

**உறுப்பினர்களின் ஊதியம்.**

12. பணிப்பாளர் தலைமையதிபதி என்ற தன்மையில் ஊதியமளிக்கப்படுவதற்கு உரித்துடையவரான உபதவிசாளர் தவிர்ந்த எல்லா உறுப்பினர்களும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் நிறுவனத்தின் நிதிகளிலிருந்து ஊதியமளிக்கப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

**பேரவையின் கூட்டங்கள்.**

13. (1) நான்கு உறுப்பினர்கள் பேரவையின் கூட்டம் எதிலும் கூட்ட நடப்பெண்ணை அமைத்தல் வேண்டும்.

(2) பேரவையின் நான்கு உறுப்பினர்களாவது இலங்கையில் சமூகமாக இருப்பின் இலங்கையில் சமூகமாயிருக்கும் உறுப்பினர்களுக்கு இடையிலான பத்திரங்களை சுற்றி அனுப்புவதன்மூலமும் அத்தகைய உறுப்பினர்கள் அப்பிரச்சினை மீதான தமது கருத்துக்களையும் வாக்குகளையும் எழுத்தில் பதிவுசெய்வதன் மூலமும் ஏதேனும் பிரச்சினைக்கு முடிபுசெய்யப்படலாம், அத்துடன் அத்தகைய விடயத்தில், அத்தகைய பிரச்சினையினதும், கருத்துக்களினதும் வாக்குகளினதும் அறிக்கையொன்று பேரவையின் அடுத்த கூட்டத்தில் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் நிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகத்தில் பதியப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய வாக்குகள் சமமாகவிருக்குமிடத்து, அத்தகைய பிரச்சினையானது முடிபுசெய்யப்படுவதற்கெனப் பேரவையின் கூட்டமொன்றில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) இதனகத்து அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமைய, பேரவையானது அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கையாளப்படுதல் தொடர்பிலும் ஆன அதன் சொந்த நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(4) பேரவையின் செயல் அல்லது முடிபு எதுவும் அல்லது நடவடிக்கைகள் எவையும் அதன் உறுப்பினர்களுக்கிடையே வெற்றிடம் ஒன்று உள்ள காரணத்தினால் மட்டும் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாட்டின் காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றதாக்கப்படுதல் ஆகாது.

**இலச்சினை.**

14. (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு சாதனம் தவிர்ந்த வேறேதேனும் சாதனத்தில் நிறுவனத்தின் இலச்சினையைப் பொறித்தலானது, பின்வருவோரின் முன்னிலையிலும் பின்வருவோரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டும் செய்யப்படல் வேண்டும்:—

(அ) பேரவையின் தவிசாளரும் உபதவிசாளரும், அல்லது

(ஆ) பேரவையின் தவிசாளரும் அல்லது உபதவிசாளரும் வேறு எவரேனும் உறுப்பினரும், அல்லது

(இ) அத்தகைய சந்தர்ப்பமொன்றில் பேரவையின் சார்பில் செயலாற்றவென பேரவையினால் அதிகாரமளிக்கப்பட்டிருக்கக் கூடியவாறான பேரவையின் அத்தகைய உறுப்பினர் ஒருவரும், நிறுவனத்தின் பணியாட்டொகுதியின் உறுப்பினர் ஒருவரும்.

(2) நிறுவனத்தினால் சேவை எதனையும் ஆற்றுவதற்கான உடன்படிக்கையொன்றைக் கொண்ட சாதனமொன்றுக்கு பேரவையின் இலச்சினையைப் பொறித்தலானது, நிறுவனத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியின் முன்னிலையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அவரால் அத்தாட்சிப்படுத்தப்படுதலும் வேண்டும் அல்லது அவர் வருகை தராதவிடத்து, அத்தகையதொரு சந்தருப்பத்தில் பணிப்பாளர் தலைமையதிபதியின் சார்பில் செயலாற்றவெனப் பேரவையினால் அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் நிறுவனத்தின் பணியாட்டொகுதியின் உறுப்பினர் எவரினதும் முன்னிலையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அவரால் அத்தாட்சிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

15. (1) பேரவையானது, அதன் எவையேனும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, பேரவையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் குழுவுக்கு அல்லது நிறுவனத்தின் எவரேனும் ஊழியருக்குக் கையளிக்கலாம். பேரவையின் தத்துவங்களையும் கடமைகளையும் கையளித்தல்.

(2) பேரவையின் தத்துவங்கள் அல்லது கடமைகள் எவையேனும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கையளிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் தலைமையதிபதி, உறுப்பினர் அல்லது ஊழியர், பேரவையின் சிறப்பான அல்லது பொதுவான பணிப்புகளுக்கமைய அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகித்தல் அல்லது புரிதல் வேண்டும்.

16. (1) பேரவையானது அதன் பணிகளை புரிவதில் அதற்கு உதவி செய்யவெனக் குழுக்களைத் தாபிக்கலாம் என்பதுடன் அத்தகைய குழு எதனதும் உறுப்பினர்களாக இருப்பதற்குத் தகுந்தவர்களென அது கருதக்கூடியவாறான அத்தகைய ஆட்களை (அவர் நிறுவனத்தின் ஊழியர் ஒருவராக இருப்பினுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி) நியமிக்கவும் செய்யலாம். குழுவைத் தாபித்தல்.

(2) பேரவையானது அதன் தத்துவங்களில் அது தகுந்ததெனக் கருதக்கூடியவாறான அத்தகையவாறானவையை அவ்வாறு தாபிக்கப்பட்ட குழுவொன்றுக்குக் குறித்தொதுக்கலாம். ஆனால் அது குழுவொன்றுக்குக் குறித்தொதுக்கியிருக்கக்கூடியதான தத்துவம் எதனையும் மீளவுரித்தாக்குதலாகாது. குழுவொன்றினால் செய்யப்பட்ட முடிபு எதனையும் பேரவை திருத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்.

(3) அத்தகைய ஏதேனும் குழுவின் உறுப்பினர்கள் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியத்தையும் படிகளையும் நிறுவனத்தின் நிதியத்திலிருந்து பெறலாம்.

## பாகம்—II

### சான்றுப்படுத்தல் குறிகள்

சான்றுப்படுத்தல் குறிகள்.

17. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, நிறுவனமானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், ஏதேனும் விற்பனைப் பொருளுக்காக அல்லது விளையுள்ளுக்காக அல்லது ஏதேனும் விற்பனைப்பொருளின் அல்லது விளையுள்ளின் உற்பத்திக்காக, தயாரிப்புக்காக, பதனிடுகைக்காக அல்லது பரிகரிப்புக்காக நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நியம அளவுக் குறிப்பீடு தொடர்பில் அதனால் ஏற்றுக்கொள்ளப்பட்டதான ஏதேனும் குறியை அந்த விற்பனைப்பொருள் அல்லது விளையுள் தொடர்பான அல்லது அந்த விற்பனைப்பொருளின் அல்லது விளையுள்ளின் உற்பத்தி, தயாரிப்பு, பதனிடுகை அல்லது பரிகரிப்பு தொடர்பான சான்றுப்படுத்தல் குறியொன்றாக இருப்பதாக வெளிப்படுத்தலாம் என்பதுடன், அதே முறையில் அத்தகைய ஏதேனும் குறியை ஒழிக்கலாம் அல்லது திருத்தலாம்.

(2) விடயத்திற்கேற்றுற்போன்று 1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தினால் நீக்கப்பட்ட வியாபாரக்குறிகள் கட்டளைச்சட்டத்தின் கீழும் 1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, புலமைச்சொத்துச் சட்டக் கோவைச் சட்டத்தின் கீழும் ஏதேனும் விற்பனைப்பொருள் அல்லது விளையுள் தொடர்பில் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் வியாபாரக்குறியுடன் ஒத்ததாயுள்ள குறி எதுவும் அல்லது அத்தகைய ஏதேனும் வியாபாரக் குறியெனத் தவறாகக் கொள்ளப்படக்கூடிய சாத்தியம் கொண்டதுமான அந்த வியாபாரக் குறியைக் கிட்டத்தட்ட ஒத்திருக்கும் குறி எதுவும், அந்த விற்பனைப்பொருள் அல்லது விளையுள் தொடர்பில் அல்லது அதையொத்த ஏதேனும் விற்பனைப்பொருள் அல்லது விளையுள் தொடர்பில் அல்லது அந்த விற்பனைப்பொருளினது அல்லது விளையுள்ளினது உற்பத்தி, தயாரிப்பு, பதனிடுகை அல்லது பரிகரிப்பு தொடர்பில் சான்றுப்படுத்தல் குறியொன்றாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்படுதல் ஆகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான அறிவித்தலொன்று இயைபான நியம அளவுக்குறிப்பீடு அல்லது அதன் திருத்தம் தொடர்பாக நிறுவனம் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சான்றுப்படுத்தல் குறிகளுடன் ஒத்த குறிகளை வியாபாரக் குறிகளாகப் பதிவு செய்வதற்கான தடை.

18. ஆளெவரும் சான்றுப்படுத்தல் குறியொன்றாக இருப்பதாக 17 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ள குறியொன்றை ஒத்திருக்கும், அல்லது சான்றுபடுத்தல் குறியொன்றெனத் தவறாகக் கொள்ளப்படக்கூடிய சாத்தியம் கொண்டதாக இருக்கும் வகையில் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்டவொரு குறியைக் கிட்டத்தட்ட ஒத்திருக்கும் ஏதேனும் வியாபாரக் குறியை , 1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டக்கோவைச் சட்டத்தின்கீழ் வியாபாரக் குறியொன்றாகப் பதிவு செய்வித்தலாகாது.

அனுமதிச் சீட்டினால் அதிகாரமளிக்கப்பட்டாலன்றியும் இப் பிரிவுக்கு வேறுவகையில் இணங்கவன்றியும் சான்றுப் படுத்தல் குறிகள் விற்பனைப் பொருட்களுக்கும் வினையுள்களுக்கும் பயன்படுத்தப்படுதலாகாது.

19. (1) நிறுவனமானது 17 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் எதையும் வெளியிடும் போதிலெல்லாம்—

(அ) நிறுவனத்தினால் அல்லது நிறுவனத்தினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் வழங்கப்பட்டவோர் அனுமதிச் சீட்டின் அதிகாரத்தின்கீழ் தவிரவும், அத்துடன்

(ஆ) அந்த விற்பனைப்பொருள் அல்லது வினையுள் இயைபான நியம அளவுக் குறிப்பீட்டுடன் இணங்கியிருந்தாலன்றியும் அல்லது அந்த நியம அளவுக்குறிப்பீட்டுக்கிணங்க உற்பத்திசெய்யப்பட்டு, தயாரிக்கப்பட்டு அல்லது பதனிடப்பட்டு அல்லது பரிகரிக்கப்பட்டு இருந்தாலன்றியும்,

ஆளெவரும் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சான்றுப்படுத்தல் குறியை ஏதேனும் விற்பனைப்பொருளுக்கு அல்லது வினையுள்ளுக்கு இடுதலாகாது.

(2) (அ) ஏதேனும் விற்பனைப்பொருளின் அல்லது வினையுள்ளின் கொள்கலம் அல்லது உறை எதற்கும் அல்லது ஏதேனும் விற்பனைப் பொருளுக்கு அல்லது வினையுள்ளுக்கு இணைக்கப்பட்டுள்ள அல்லது அவற்றின் ஏதேனும் கொள்கலத்திற்கு அல்லது உறைக்கு இணைக்கப்பட்டுள்ள சுட்டுத்துண்டுக்கு சான்றுப்படுத்தல் குறியொன்றை இடுகின்ற; அல்லது

(ஆ) சான்றுப்படுத்தப்பட்ட குறி எதுவும் இடப்பட்டதான ஏதேனும் கொள்கலனில் அல்லது உறையில் அல்லது அத்தகைய குறி எதுவும் எந்தச் சுட்டுத்துண்டுக்கு இடப்பட்டுள்ளதோ அந்தச் சுட்டுத்துண்டு இணைக்கப்பட்டுள்ளதான ஒரு கொள்கலத்தில் அல்லது உறையில் ஏதேனும் விற்பனைப்பொருளை அல்லது வினையுள்ளை வைக்கின்ற அல்லது அடைக்கின்ற; அல்லது

(இ) ஏதேனும் விற்பனைப்பொருளின் அல்லது வினையுள்ளின் விற்பனை தொடர்பாக, சான்றுப்படுத்தப்பட்ட குறி எந்த நியம அளவுக் குறிப்பீடு தொடர்பானதோ அந்த நியம அளவுக் குறிப்பீட்டுடன் விற்பனைப்பொருள் அல்லது வினையுள் இணங்கியொழுகுகின்றது என்னும் அல்லது அந்த நியம அளவுக் குறிப்பீட்டுக்கிணங்க அது உற்பத்தி செய்யப்பட்டுள்ளது, தயாரிக்கப்பட்டுள்ளது, பதனிடப்படுத்தப்பட்டுள்ளது அல்லது பரிகரிக்கப்பட்டுள்ளது என்னும் எண்ணத்தைத் தரும்வகையில் கணிக்கப்பட்ட ஒரு முறையில் அல்லது சூழ்நிலைகளின்கீழ் சான்றுப்படுத்தல் குறியொன்றுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதேனும் குறிப்பீட்டைச் செய்கின்ற,

ஆளெவரும், (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக அந்த சான்றுப்படுத்தல் குறியை அந்த விற்பனைப் பொருளுக்கு அல்லது வினையுள்ளுக்குப் பயன்படுத்தியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஆளெவரும் ஏதேனும் விற்பனைப்பொருளின் அல்லது வினையுள்ளின் விற்பனை சம்பந்தமாக—

(அ) ஏதேனும் விற்பனைப் பொருளுக்காக அல்லது வினையுள்ளுக்காக அல்லது அந்த விற்பனைப்பொருளின் அல்லது வினையுள்ளின் உற்பத்திக்காக, தயாரிப்புக்காக, பதனிடுகைக்காக அல்லது பரிகரிப்

புக்காக நிறுவனத்தினால் உருவகப்படுத்தப்பட்ட நியம அளவுக் குறிப்பீடு தொடர்பில் சான்றுப்படுத்தல் குறியொன்றாக குறியெதனையும் நிறுவனம் வெளிப்படுத்தியிருந்தாலன்றியும்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆள், அந்த விற்பனைப்பொருளுக்கு அல்லது வினையுள்ளுக்கு அத்தகைய சான்றுப்படுத்தல் குறியை இடுவதற்கு தனக்கு அதிகாரமளிக்கும் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டொன்றினை தனது உடைமையில் வைத்திருந்தாலன்றியும்.

நிறுவனத்திற்கு அல்லது நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டவொரு நியம அளவுக்குறிப்பீட்டுக்கு அல்லது நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்டதாகக் கொள்ளப்படும் நியம அளவுக் குறிப்பீட்டுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ குறிப்பீடு எதுவும் செய்தலாகாது.

**கட்டாய சான்றுப்படுத்தல் குறிகளைக் கட்டளையினால் வெளிப்படுத்துவதற்கான அமைச்சருக்குள்ள தத்துவம்.**

20. (1) அமைச்சரானவர், 17 ஆம், 18 ஆம், 19 ஆம் பிரிவுகளினதும் அத்துடன் இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும், 21 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகளுக்கமைய கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் பேரவையின் விதப்புரையின் மீது ஏதேனும் விற்பனைப்பொருளுக்காக அல்லது வினையுள்ளுக்காக அல்லது ஏதேனும் விற்பனைப்பொருளின் அல்லது வினையுள்ளின் உற்பத்திக்காக, தயாரிப்புக்காக, பதனிடுகைக்காக அல்லது பரிகரிப்புக்காக அதனால் அங்கீகரிக்கப்பட்டவொரு நியம அளவுக்குறிப்பீடு தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதான ஒரு சான்றுப்படுத்தல் குறியை அந்த விற்பனைப்பொருள் அல்லது வினையுள் அல்லது அந்த விற்பனைப்பொருளின் அல்லது வினையுள்ளின் உற்பத்தி, தயாரிப்பு, பதனிடுகை அல்லது பரிகரிப்பு தொடர்பிலான கட்டாய சான்றுப்படுத்தல் குறியொன்றாகக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவொரு தேதியிலிருந்து பயனுறுவதாக வெளிப்படுத்தலாம் என்பதுடன் அதேபோன்ற முறையில் அத்தகைய ஏதேனும் குறியை ஒழிக்கலாம் அல்லது திருத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட கட்டளையானது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் விடயப்பொருளான ஏதேனும் விற்பனைப்பொருள் அல்லது வினையுள் அல்லது ஏதேனும் விற்பனைப்பொருளின் அல்லது வினையுள்ளின் உற்பத்தி, தயாரிப்பு, பதனிடுகை அல்லது பரிகரிப்பு பற்றியதாயிருப்பின் கட்டளையானது, அத்தகைய வேறு சட்டத்தின் விடயம் அல்லது பணி எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சருடனை கலந்தாலோசனையின் பின்னர் அமைச்சரினால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளை எதிலும் குறித்துரைக்கப்பட்ட தேதியானது, அக்கட்டளையின் தேதியிலிருந்து மூன்று மாதங்களை முந்தாத ஒரு தேதியாயிருத்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று, கசெற்றில் வெளியிடப்படும் அடுத்துப் பின்னரானவொரு கட்டளையின்மூலம் இல்லாதொழிக்கப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

**20 ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்குவதற்கான முன்னம் பற்றிய அறிவித்தல்.**

21. (1) இருபதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளை எதுவும், அத்தகைய சான்றுப்படுத்தல் குறியையும், அத்தகைய குறி எந்த நியம அளவுக் குறிப்பீடு தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோ அந்த நியம அளவுக் குறிப்பீட்டின் தலையங்கத்தையும் இலக்கத்தையும் குறித்துக்காட்டும் அத்தகைய கட்டளையை ஆக்குவதற்கான அமைச்சரின் முன்னத்தை வெளிப்படுத்துவதும் உத்தேசக் கட்டளைக்கெதிரான ஆட்சேபனைகள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் எத்தேதியன்று அல்லது எத்தேதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்படுமென்பதை குறித்துரைப்பதுமான அறிவிப்பு ஒன்று கசெற்றிலும், ஒரு சிங்களச் செய்தித்தாளிலும், தமிழ்ச் செய்தித்தாளிலும், ஆங்கிலச் செய்தித்தாளிலும் வெளியிடப்பட்டாலொழிய, அமைச்சரினால் ஆக்கப்படுதலாகாது.

(2) அவ்வாறு செய்யப்பட்ட ஆட்சேபனை ஒவ்வொன்றும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் எந்த ஏதுக்களின் மீது உத்தேசிக்கப்பட்ட கட்டளைக்கு ஆட்சேபனை எடுக்கப்படவுள்ளதோ அந்த ஏதுக்களின் கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, தன்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லா ஆட்சேபனைகளையும் பேரவையின் தவிசாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் அனுப்பிவைக்கப்பட்ட ஒவ்வோர் ஆட்சேபனையையும் பேரவையானது கவனத்திற்கெடுத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆட்சேபனையைப் புலனாய்வு செய்யும் நோக்கத்திற்காக அது அவசியமானதெனக் கருதும் அத்தகைய விசாரணைகளை நடாத்துதலும் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழான விசாரணையொன்று நடாத்தப்பட வேண்டிய தேதியும், நேரமும், இடமும் பற்றியதான எழுத்திலான அறிவித்தல் ஆட்சேபனையைச் செய்கின்ற ஆளுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும். ஆட்சேபனையைச் செய்யும் ஆள் அல்லது அவரால் எழுத்தில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் அத்தகைய விசாரணையில் சமுகமாயிருப்பதற்கும் அத்தகைய ஆட்சேபனை மீது கேட்கப்படுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(6) நான்காம் உட்பிரிவின்கீழ் பேரவையினால் கவனத்திற்கெடுக்கப்பட்ட ஆட்சேபனை ஒன்றின் மீதான அதனது முடிபானது, பணிப்பாளர் தலைமையதிபதிக்குத் தெரிவிக்கப்படல் வேண்டும்; பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய முடிபை அத்தகைய ஆட்சேபனையைச் செய்த ஆளுக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

**மேன்முறையீடுகள்.**

22. பேரவையினால் 21 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் கவனத்திற்கெடுக்கப்பட்ட ஏதேனும் ஆட்சேபனை மீதான பேரவையின் முடிவொன்றினால் இன்னலுறும் ஆளொருவர், அத்தகைய முடிவானது அவருக்கு அறிவிக்கப்பட்ட தேதிக்குப்பின்னர் பதினைந்து நாட்களுக்குள் அத்தகைய முடிபுக்கெதிராக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின்மீது செயலாளரின் முடிபானது முற்றானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

20 ஆம் பிரிவு ஏற்புடையதாகும் விற்பனைப் பொருளின் அல்லது விளையுள்ளின் விற்பனையை அனுமதிச் சீட்டொன்றின் கீழன்றித் தவிரவும் அத்துடன் விற்பனைப்பொருள் அல்லது விளையுள் குறிப்பீடு ஆகியவற்றுடன் இணங்கியொழுகினாலன்றியும் தடைசெய்தல்.

23. சான்றுபடுத்தல் குறியொன்றை ஏதேனும் விற்பனைப் பொருளுக்கான அல்லது விளையுள்ளுக்கான அல்லது ஏதேனும் விற்பனைப் பொருளின் அல்லது விளையுள்ளின் உற்பத்திக்கான, தயாரிப்புக்கான, பதனிடலுக்கான அல்லது பரிகரிப்புக்கான கட்டாய சான்றுப்படுத்தல் குறியொன்றாக 20 ஆம் பிரிவின் கீழான கட்டளையினால் அமைச்சரானவர் வெளிப்படுத்தியிருக்குமிடத்து, ஆளெவரும்—

(அ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறு அலுவலரினால் வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டொன்றின் கீழ் தவிரவும்; அத்துடன்

(ஆ) அந்த விற்பனைப்பொருள் அல்லது விளையுள்—

(i) அந்த இயைபான நியம அளவுக் குறிப்பீடுடன் இணங்கியொழுகினாலன்றியும் ; அல்லது

(ii) அந்த இயைபான நியம அளவுக் குறிப்பீட்டுக்கு இணங்க உற்பத்தி செய்யப்பட்டு, தயாரிக்கப்பட்டு, பதனிடப்பட்டு அல்லது பரிகரிக்கப்பட்டு இருந்தாலன்றியும்,

அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து அந்த விற்பனைப் பொருளை அல்லது விளையுள்ளை விற்பனைசெய்தலாகாது.

அனுமதிச் சீட்டுக்களை வழங்குதல்.

24. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அனுமதிச்சீட்டொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அத்தகைய பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு எழுத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(2) (அ) விண்ணப்பகாரரின் குழுமத்தில் பரிசோதனை செய்யும் வசதிகள் கிடைக்கற்பாலனவாக உள்ளன என எண்பிக்கப்பட்டும் அத்துடன் எடுத்துப் பரிசோதிக்கப்பட்ட மாதிரிகள் இயைபான இலங்கை நியமத்தினை உறுதிப்படுத்துகின்றனவெனக் காணப்பட்டும் இருந்தாலன்றியும் ;

(ஆ) அனுமதிச்சீட்டொன்றினை வைத்திருத்தல் தொடர்பான பொது நிபந்தனைகளை விண்ணப்பகாரர் ஏற்றுக்கொள்வதற்கு உடன்பட்டாலன்றியும் ;

(இ) அனுமதிச்சீட்டானது எந்த விற்பனைப்பொருள் அல்லது விளையுள் தொடர்பாக வழங்கப்பட்டதோ அந்தக் குறிப்பிட்ட விற்பனைப் பொருள் அல்லது விளையுள் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கு விண்ணப்பகாரர் உடன்பட்டாலன்றியும் ; அத்துடன்

(ஈ) விண்ணப்பகாரர், பேரவையானது அமைச்சரின் அங்கீகாரத்துடன் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய கட்டணத்தைக் கொடுத்தாலன்றியும் அத்துடன் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகினாலன்றியும்,

இப்பிரிவின் கீழ் அனுமதிச்சீட்டெதுவும் வழங்கப்படுதலாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் அனுமதிச்சீட்டு ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக அந்நோக்கத்துக்கென விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு செல்லுபடியானதாயிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவானதாயிருத்தலும் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டொன்று இச்சட்டத்தினது அல்லது அதன் கீழாக்கப்பட்ட எவையேனும் விதிகளினது, ஒழுங்குவிதிகளினது ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமைக்காக, அது எவ்வாளுக்கு வழங்கப்பட்டதோ அவ்வாளுக்கு இல்லாததாக்குகைபற்றிய எழுத்திலான அறிவித்தல் கொடுக்கப்பட்டதன் பின்னர் எந்நேரத்திலும் இல்லாததாக்கப்படலாம்.

(5) இப்பிரிவின்கீழான அனுமதிச்சீட்டொன்றுக்கான விண்ணப்பமொன்று மறுக்கப்படுமிடத்து, அத்தகைய மறுப்புப் பற்றிய அறிவித்தலானது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அத்தகைய பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்யும் ஆளுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது அத்தகைய பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் அனுமதிச் சீட்டொன்றை வழங்குவதற்கான மறுப்பினால் அல்லது அனுமதிச்சீட்டொன்று இல்லாததாக்கப்படுவதனால் இன்னலுறும் ஆளெவரும் அத்தகைய மறுப்பு அல்லது இல்லாதாக்குகை பற்றிய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற தேதியின் பின்னர் பதினைந்து நாட்களுக்குள் அத்தகைய மறுப்புக்கு அல்லது இல்லாதாக்குகைக்கு எதிராக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின்மீதான செயலாளரின் முடிபானது முற்றும் முடிவானதுமாதல் வேண்டும்.

## பாகம் III

### நிறுவனத்தின் பணியாட்டொகுதி

**25.** (1) நிறுவனத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியாயிருப்பதற்கு அறிவியல் ரீதியாக அல்லது தொழினுட்ப ரீதியாக அல்லது அறிவியல் ரீதியாகவும் தொழினுட்ப ரீதியாகவும் பொருத்தமான தகைமை பெற்றுள்ளவரான ஆளொருவரை (இவர் இச்சட்டத்தில் பணிப்பாளர் தலைமையதிபதியெனக் குறிப்பீடு செய்யப்படுவார்) அமைச்சர் நியமித்தல் வேண்டும். நிறுவனத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியின் நியமனம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியின் ஊழியத்தின் நியதிகளும் நிபந்தனைகளும் அமைச்சரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதியின் ஊதியமானது, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு இயலாதிருக்கும் போதெல்லாம், அத்தகைய இல்லாமையின்போது அவரது இடத்தில் செயலாற்றவென வேறு எவரேனும் ஆளை அமைச்சர் நியமிக்கலாம்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிகளானவை 3 ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க போவையினால் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகளுக்கிணங்க நிறுவனத்தின் வேலையை ஒழுங்குபடுத்தலும் கொண்டுநடாத்தலும் நெறிப்படுத்தலும் ஆதல் வேண்டும்.

நிறுவனத்தின் மற்ற அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்.

26. (1) நிறுவனம் எக்குறிக்கோள்களுக்காகத் தாபிக்கப்பட்டதோ அக்குறிக்கோள்களைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமெனப் போவையானது கருதக்கூடியவாறான அத்தகைய மற்ற அலுவலர்களையும் சேவையாளர்களையும் அது நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் போவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய விதத்திலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவர்கள் போவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தவராயிருத்தலும் வேண்டும்.

(3) போவையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் அவ் அலுவலரினதும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன் அதே போன்ற சம்மதத்துடன் போவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் நிறுவனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, தேசிய அரசுப் போவையின் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் நிறுவனத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, தேசிய அரசுப் போவையின் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவை ஆற்றுவதாக உடன்பட்டுள்ள எவரேனும் ஆளை நிறுவனம் ஊழியத்திலமர்த்துகின்றவிடத்து, அந்த ஆளினால் நிறுவனத்துக்கு ஆற்றப்பட்ட சேவைக்காலம் எதுவும், அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாட்டினை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்திற்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

27. பணிப்பாளர் தலைமையதிபதி தவிர்ந்த நிறுவனத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் மீது வேலைநீக்கம் உட்பட, ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்குப் பேரவைக்குத் தத்துவமிருத்தல் வேண்டும். நிறுவனத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கான பேரவையின் தத்துவம்.

28. (1) நிறுவனத்தின் பணியாட்டொகுதியின் மற்ற அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனம் தொடர்பானதும் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வேலைநீக்கம் தொடர்பானதுமான அதன் தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எவற்றையேனும் பேரவை பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளிக்கலாம். பணிப்பாளர் தலைமையதிபதியினால், அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அத்தகைய எவரேனும் அலுவலரினது அல்லது சேவையாளரினது ஊதியம் உட்பட, ஊழிய நிபந்தனைகள் பேரவையின் ஒருப்பாட்டுடன் அவரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். பேரவையின் தத்துவங்களைக் கையளித்தல்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், பேரவையின் முன்னங்கீகாரத்துடனன்றி, நிறுவனத்தின் அலுவலரொருவராகவோ அல்லது சேவையாளரொருவராகவோ இலங்கைப் பிரசையொருவராக இல்லாத ஆளொவரினதும் சேவையை வேண்டுதலோ, அல்லது சேவையைப் பெறுவதற்கு உடன்படிக்கைகள் செய்தலோ அல்லது அவரை நியமித்தலோ ஆகாது.

(3) பணிப்பாளர் தலைமையதிபதியினாலான எவரேனும் அலுவலரினது அல்லது சேவையாளரினது வேலைநீக்கமானது, பேரவையின் முன்னங்கீகாரத்துடனானதாகவிருத்தல் வேண்டும்.

29. (1) பேரவையின் அபிப்பிராயப்படி பொருத்தமான தகைமை பெற்றவராயுள்ள பணியாட்டொகுதியின் உறுப்பினர் எவரையும் அல்லது வேறு எவரேனும் ஆளைப் பேரவை இச்சட்டத்தின் நோக்கத்திற்காக பரிசோதகர் ஒருவராக நியமிக்கலாம். பரிசோதகர்களை நியமித்தல்.

(2) ஒவ்வொரு பரிசோதகருக்கும், அவர் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பரிசோதகர் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார் எனப் பயனுறும் வகையிலான சான்றிதழொன்று பேரவையினால் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) நிறுவனத்தின் பணியாட்டொகுதியின் உறுப்பினரொருவரல்லாதவரும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பரிசோதகர் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளவருமான ஆளொருவர் நிறுவனத்தின் நிதியத்திலிருந்து பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியத்தை அல்லது படியைப் பெறலாம்.

5—எ 073986 (12/83)

பரிசோதகர்களின் தத்துவங்கள்.

30. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக பரிசோதகர் எவரும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின் சார்பில் செயலாற்றவென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளினால் பொதுவாக அல்லது குறிப்பாக அதற்கென அறிவுறுத்தப்பட்டிருப்பின்—

(அ) முன்னறிவித்தலின்றி தொழில் நேரங்களின்போது எந்நேரத்திலாயினும் இரவிலோ, பகலிலோ, நியம அளவுக்குறிப்பீடொன்று அல்லது சான்றுப்படுத்தல் குறியொன்று எந்த விற்பனைப்பொருளுக்காக அல்லது விளையுள்ளுக்காக உள்ளதோ அல்லது எந்த விற்பனைப்பொருளின் அல்லது விளையுள்ளின் உற்பத்தி, தயாரிப்பு, பதனிடுகை அல்லது பரிகரிப்பு என்பவற்றுக்காக உள்ளதோ அத்தகைய அறிவுறுத்துரைகளில் குறித்துரைக்கப்பட்ட விற்பனைப் பொருள் அல்லது விளையுள் உற்பத்திசெய்யப்படுகின்ற, தயாரிக்கப்படுகின்ற, பதனிடப்படுகின்ற அல்லது பரிகரிக்கப்படுகின்ற, அல்லது உற்பத்தி செய்யப்படுகின்றது, தயாரிக்கப்படுகின்றது, பதனிடப்படுகின்றது அல்லது பரிகரிக்கப்படுகின்றது என நியாயமாக சந்தேகிக்கப்படுகின்ற எவையேனும் வளவுகளில் அல்லது வளவுகளின்மீது அல்லது வியாபார நோக்கத்துக்காக அத்தகைய ஏதேனும் விற்பனைப்பொருள் அல்லது விளையுள் எந்த வளவுகளில் அல்லது எந்த வளவுகளின்மீது வைத்திருக்கப்படுகின்றதோ அல்லது வைத்திருக்கப்படுகின்றதென நியாயமாகச் சந்தேகிக்கப்படுகின்றதோ அந்த வளவுகளின் அல்லது அந்த வளவுகளின் மீது நுழையலாம்;

(ஆ) அத்தகைய விற்பனைப் பொருளின் அல்லது விளையுள்ளின் அல்லது அவற்றின் உற்பத்தியில், தயாரிப்பில், பதனிடுகையில் அல்லது பரிகரிப்பில் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படுவதற்கு முன்னைப்பட்டதென சந்தேகிக்கப்படுகின்ற ஏதேனும் பொருட்களை அல்லது பதார்த்தத்தை பார்வையிட்டு பரிசோதனையிடலாம் அல்லது அவற்றின் மாதிரிகளை எடுக்கலாம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் விற்பனைப்பொருளின் அல்லது விளையுள்ளின் அல்லது பொருட்களின் அல்லது பதார்த்தத்தின் ஏதேனும் அளவைக்கொண்டுள்ள அல்லது கொண்டுள்ளதென சந்தேகிக்கப்படுகின்ற ஏதேனும் பொதியை அல்லது கொள்கலத்தைத் திறக்கவும் செய்யலாம்;

(இ) எந்த விற்பனைப்பொருளின் அல்லது விளையுள்ளின் உற்பத்திக்கு, தயாரிப்புக்கு, பதனிடுகைக்கு அல்லது பரிகரிப்புக்கு நியமக் குறிப்பீடொன்று அல்லது சான்றுப்படுத்தப்பட்ட குறியீடொன்று இருக்கின்றதோ அந்த ஏதேனும் விற்பனைப்பொருளின் அல்லது விளையுள்ளின் உற்பத்தி, தயாரிப்பு, பதனிடுகை அல்லது பரிகரிப்பு சம்பந்தமாக அத்தகைய எவையேனும் வளவுகளில் அல்லது வளவுகளின்மீது கொண்டு நடாத்தப்படும் தொழிற்பாடுகள் எவற்றையும் பார்வையிடலாம்;

(ஈ) எவரேனும் ஆளினது அல்லது அவரின் சார்பில் வேறு எவரேனும் ஆளினது உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ளதும், ஏதேனும் விற்பனைப்பொருளின் அல்லது விளையுள்ளின் உற்பத்தியை, தயாரிப்பை, பதனிடுகையை அல்லது

பரிகரிப்பைப் பற்றியதுமான அத்தகைய புத்தகத்தின், அறிவித்தலின், பதிவேட்டின், நிரலின் அல்லது வேறு ஆவணத்தின் காண்பிப்பை எப்பொழுதும் எவ்விடத்திலும் அல்லது பரிசோதகரால் நிருணயிக்கப்பட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் அவ்வாளிடமிருந்து எந்நேரத்திலும் தேவைப்படுத்தலாம்;

(உ) பந்தி (அ) என்பதில் குறிப்பிடு செய்யப்பட்ட ஏதேனும் விற்பனைப்பொருள் அல்லது வினையுள் பற்றியதான அல்லது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படவுள்ள ஏதேனும் அனுமதிச் சீட்டுப்பற்றியதான அத்தகைய ஏதேனும் புத்தகத்தை, அறிவித்தலை, பதிவேட்டை, நிரலை அல்லது வேறு ஆவணத்தைப் பரிசோதனை செய்யலாம்; அத்தகைய ஏதேனும் புத்தகத்தின், அறிவித்தலின், பதிவேட்டின், நிரலின் அல்லது வேறு ஆவணத்தின் பிரதிகளை எடுக்கலாம் அல்லது அவற்றிலிருந்து பொழிப்புக்களை எடுக்கலாம்; அவற்றில் அடங்கியுள்ள எவையேனும் பதிவீடுகள் பற்றி விளக்கமொன்றை எவரேனும் ஆளிடமிருந்து தேவைப்படுத்தலாம் என்பதுடன், இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு பற்றி அவரின் அபிப்பிராயப்படி சான்று தரக்கூடியதாயுள்ள அத்தகைய ஏதேனும் புத்தகத்தை, அறிவித்தலை, பதிவேட்டை, நிரலை அல்லது வேறு ஆவணத்தைக் கைப்பற்றவும் செய்யலாம்;

(ஊ) மேற்சொல்லப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு தான் நுழைந்த வளவுகளின் மீது தான் காணுகின்றவர்களான ஒவ்வோர் ஆளையும், அல்லது அத்தகைய எவையேனும் வளவுகளில் ஊழியத்திலமர்த்தப்பட்டுள்ளாரென, ஊழியத்திலமர்த்தப்பட்டிருந்தாரென அல்லது இவ்வுப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள எதனையும் உடைமையில், பாதுகாப்பில், கட்டுக்காப்பில் கொண்டுள்ளாரென தான் நம்புவதற்கு தனக்கு நியாயமான ஏதுக்களுள்ள ஒவ்வோர் ஆளையும், தன்னால் புலனாய்வு செய்யப்படுகின்றதான ஏதேனும் கருமம் தொடர்பாக அவர் தருந்ததெனக் கருதுகின்றவாறான ஒன்றில், தனியாகவோ அல்லது அத்தகைய வேறெவரேனும் ஆளின் முன்னிலையிலோ கேள்வி கேட்கலாம்;

(எ) பந்திகள் (ஈ), (உ) அல்லது (ஊ) என்பனவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள எவரேனும் ஆளை தன்னால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் தன் முன்னர் தோன்றுமாறு தேவைப்படுத்தலாம் என்பதுடன், தன்னால் புலனாய்வு செய்யப்படுகின்றதான ஏதேனும் கருமம் சம்பந்தமாக அவ்வாளைக் கேள்வி கேட்கவும் செய்யலாம்;

(ஏ) அவரது கடமைகளை நிறைவேற்றுகையில் ஏதேனும் பாரதூரமான முட்டுக்கட்டை உள்ளதென எதிர்பார்ப்பதற்கு அவருக்கு நியாயமான காரணமிருப்பின் தனக்கு உதவி புரிவதற்கு ஒரு பொலிசு அலுவலரினது அல்லது ஒருவருக்கு மேற்பட்ட பொலிசு அலுவலர்களினது சேவைகளைப் பெறலாம்; அத்துடன்

(ஐ) இவ்வுட்பிரிவின் முற்போந்த பந்திகளினால் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதுடன் தொடர்புடையவையும் அதற்கு இடைநேர்விளைவானவையுமான அத்தகைய வேறு தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பரிசோதகரொருவர் தனது தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்காக அவரினால் தேவைப்படுத்தப்பட்டவையான அத்தகைய வசதிகளையும் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எவையேனும் வளவுகளுக்குப் பொறுப்பாயுள்ள ஆளொருவர் எல்லா நேரங்களிலும் கொடுத்துதவுதல் வேண்டும்.

(3) இப்பிரிவினால் அவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்கள் எவற்றையும் பிரயோகிக்கும் பரிசோதகர் எவரும் 29 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள சான்றிதழையும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எழுத்திலான அறிவுறுத்தல்களையும் கோரிக்கையின் மீது காண்பித்தல் வேண்டும்.

**நிறுவனத்தின் பணியாட்டொகுதிக்கான ஓய்வூதியத் திட்டம்.**

31. பேரவையானது, நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கு ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள், ஓய்வுகாலப்படிகள் ஆகியவற்றின் கொடுப்பனவுக்காக ஓர் ஓய்வூதியத்திட்டத்தையும் அல்லது சகாயநிதியத்தையும், அவர்களின் நலனுக்கானவையான அத்தகைய வேறு திட்டங்களையும், அத்துடன் பணியாட்டொகுதியின் காலஞ்சென்ற உறுப்பினர்களினது விதவைகளுக்கும் அநாதைகளுக்கும் ஓய்வூதியங்களை ஏற்பாடு செய்வதற்கான ஒரு விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தையும் அல்லது திட்டத்தையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன், நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களை அத்தகைய ஏதேனும் திட்டத்திற்கு அல்லது நிதியத்திற்கு உதவுதொகைகள் செலுத்துமாறு தேவைப்படுத்தலாம்; அத்துடன், அத்தகைய உறுப்பினர்களின் சம்பளங்களிலிருந்து அல்லது கூலிகளிலிருந்து அத்தகைய உதவுதொகைகளைக் கழிக்கலாம் என்பதுடன், நிறுவனத்தின் வருவாய்களிலிருந்து அத்தகைய ஏதேனும் திட்டத்துக்கு அல்லது நிதியத்துக்கு உதவுதொகைகளையும் செலுத்தலாம்.

## பாகம் IV

### நிறுவனத்தின் நிதியும் கணக்குகளும்

**திரண்ட நிதியம்.**

32. (1) திரண்ட நிதியம் என்றழைக்கப்படும் நிதியம் ஒன்றை நிறுவனமானது கொண்டிருத்தல் வேண்டும்.

(2) திரண்ட நிதியத்திற்குள்—

(அ) நிறுவனத்தின் மூலதன செலவினமாக பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) 1964 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் பணியகச் சட்டத்தின் 31 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட மூலதன நிதியத்தின் வரவிலிருக்கும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்,

செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) திரண்ட நிதியத்திற்குள் வரவு வைக்கப்பட்ட பணங்கள் மூலதனத் தன்மை ஒன்று கொண்ட செலவினத்திற்காகவும், பேரவையினால் தீர்மானிக்கப்படவேண்டிய அத்தகைய வேறு நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

நிறுவனத்தின் வருவாயும், நிறுவனத்தைக் கொண்டு நடாத்துவதற்கான செலவுகளும்.

33. (1) நிறுவனத்தின் வருவாயானது—

(அ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட பணங்களையும்;

(ஆ) அதனது விளையுள்களினதும் சேவைகளினதும் விற்பனையால் பெறப்பட்டவையும், ஒன்று திரட்டப்பட்டவையுமான எவையேனும் பணங்களையும்;

(இ) நிறுவனத்தின் விளையுள்களினதும் சேவைகளினதும் வெளியீடுகளினதும் விற்பனை தொடர்பில் ஏதேனும் குறிப்பிட்ட காலப் பகுதியின்போது நிறுவனத்துக்காக விலை குறிக்கும் கொள்கையைத் தீர்மானிப்பதிலிருந்து பேரவையைத் தடுப்பதற்கு அரசாங்கம் எடுத்த முடிவொன்றன் விளைவாக அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட எவையேனும் மானியங்களையும்; அத்துடன்

(ஈ) மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட இலாபங்கள் உட்பட வேறு சில்லறை வருமானத்தையும்,

கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அமைச்சரானவர், அந்நோக்கங்களுக்காக பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகளிலிருந்தும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சர் சுமத்தக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாகவும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையொன்றை (3) ஆம் உட்பிரிவில் குறிப்பிடுசெய்யப்பட்டுள்ள நோக்கங்களுக்காக ஆண்டுதோறும் உதவுதொகையாக அளிக்கலாம்.

(3) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் பெறப்பட்ட பணங்களானவை, பேரவையின் உறுப்பினர்களினதும் 16 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட எவையேனும் குழுக்களின் உறுப்பினர்களினதும் நிறுவனத்தின் பணிப்பாளரினதும் பணியாட்டொகுதியின் மற்ற உறுப்பினர்களினதும் படிகள் உட்பட அதனது ஆண்டின் கொண்டு நடாத்தும் செலவுகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், நிறுவனத்தின் நிதியாண்டின் முடிவில் செலவழிக்கப்படாது எஞ்சியிருக்கும் பணங்களின் மிகுதி எதுவும், பேரவையின் பணிப்புகளுக்கமைவாக, நிறுவனத்தின் அடுத்த நிதியாண்டிற்கான கொண்டுநடாத்தும் செலவு

களைக் கொடுத்துத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படலாம்; அல்லது நிறுவனம் எக்குறிக்கோள்களுக்காகத் தாபிக்கப்பட்டதோ அத்தகைய வேறு குறிக்கோள்களுக்காகப் பயன்படுத்தப்படலாம்.

**நிறுவனத்தின் வரவு செலவுத்திட்டம்.**

34. ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும் வரவுசெலவுத் திட்டமொன்றை நிறுவனம் தயாரித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரவுசெலவுத் திட்டமானது எந்த நிதியாண்டு பற்றியதாகவுள்ளதோ அந் நிதியாண்டு தொடங்குவதற்கு முன்னர் மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் பேரவையினால் வரவுசெலவுத்திட்டமானது அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும்.

**ஆற்றப்படும் சேவைகளுக்காக கட்டணங்களை விதித்தலும் அவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானத்தைக் கையாண்டு தீர்த்தலும்.**

35. நாற்பத்தியெட்டாம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைவாக, நிறுவனமானது, இச்சட்டத்தின்கீழ் அதனால் ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகள் தொடர்பில் அது தகுதியானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கட்டணங்களை விதிக்கலாம் அல்லது அத்தகைய நிதிசார் ஒழுங்கேற்பாடுகளைச் செய்யலாம் என்பதுடன், அத்தகைய கட்டணங்களிலிருந்து அல்லது அத்தகைய ஒழுங்கேற்பாடு தொடர்பில் பெறப்பட்ட பணங்கள் எவற்றையும், பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட பணங்கள் தொடர்பில் 33 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாக அதே முறையில் கையாளலாம்.

**நிறுவனத்துக்கு அளிக்கப்பட்ட நன்கொடைகளும் உதவுதொகைகளும்.**

36. நிறுவனமானது, எவரேனும் ஆளிடமிருந்து நன்கொடைகளை அல்லது உதவுதொகைகளைப் பெறலாமென்பதுடன், நன்கொடையை அல்லது உதவுதொகையை அளிக்கும் ஆளினால் குறிப்பிடப்பட்ட நோக்கத்துக்காகவும் நன்கொடையளிப்பவரால் அல்லது உதவுதொகை செலுத்துபவரினால் சுமத்தப்பட்ட நிபந்தனைகளுக்கிணங்கவும் அவ்வாறு பெறப்பட்ட பணங்கள் எவற்றையும் பயன்படுத்தலும் வேண்டும், அல்லது அவ்வாறு நோக்கம் எதுவும் குறிப்பிடப்படாதிருப்பின் அல்லது நிபந்தனைகள் எவையும் சுமத்தப்படாதிருப்பின், 33 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான அதேமுறையில் அல்லது அமைச்சர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு முறையில் அத்தகைய பணங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

**நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.**

37. (1) நிறுவனத்தின் நிதியாண்டு, பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) நிறுவனத்தின் வருமானமும் செலவினமும் சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன், மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய செவ்வையான கணக்குப் புத்தகங்களை பேரவையானது வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வது தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் நிறுவனத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் V

### பொது

போரவைக்கும் அதனது உறுப்பினர்களுக்குமான பாதுகாப்பு.

38. ஏதேனும் விற்பனைப்பொருள் அல்லது வினையுள் நியம அளவுக் குறிப்பீடொன்றுடன் இணங்கியொழுகுகின்றதென்ற நிகழ்வு அல்லது இணங்கியொழுகுகின்றதென சார்த்தப்பட்டுள்ளதென்ற நிகழ்வு அல்லது அத்தகைய ஏதேனும் நியம அளவுக் குறிப்பீட்டுக்கிணங்க உற்பத்தி செய்யப்பட்டு, தயாரிக்கப்பட்டு, பதனிடப்படுத்தப்பட்டு, அல்லது பரிகரிக்கப்பட்டுள்ளதென்ற நிகழ்வு அல்லது உற்பத்தி செய்யப்பட்டுள்ளதென, தயாரிக்கப்பட்டுள்ளதென, பதனிடப்பட்டுள்ளதென அல்லது பரிகரிக்கப்பட்டுள்ளதென சார்த்தப்பட்டுள்ளதென்ற நிகழ்வு, அல்லது சான்றுப்படுத்தல் குறியொன்று அல்லது கட்டாய சான்றுப்படுத்தல் குறியொன்று ஏதேனும் விற்பனைப்பொருள் அல்லது வினையுள் சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற நிகழ்வு போரவைக்கெதிராகவோ அல்லது அதனது எவரேனும் உறுப்பினருக்கெதிராகவோ அல்லது நிறுவனத்தின் பணியாட்டொகுதியின் எவரேனும் உறுப்பினருக்கெதிராகவோ ஏதேனும் தடர்ச்சி அல்லது குற்ற வழக்குத்தொடுப்பு எழுவதற்குக் காரணமாதலாகாது.

இரகசியம் பேணல்.

39. (1) போரவையின் அல்லது அதனது குழுவொன்றினது உறுப்பினர் ஒவ்வொருவரும் அல்லது நிறுவனத்தின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவர் அல்லது பரிசோதகர் ஒருவர் தனது கடமைகளைத் தொடங்குவதற்கு முன்னர், தனது கடமைகளைப் புரிவதிலும், அல்லது பணிகளை நிறைவேற்றுவதிலும் கண்டிப்பாக இரகசியத்தைப் பேணுவதாக உறுதி கூறும் வெளிப்படுத்துகையொன்றை ஒப்பமிடுதல் வேண்டும் என்பதுடன்—

(அ) அமைச்சரினால் அல்லது சட்டநீதிமன்றமொன்றின் முன்னர் ஏதேனும் தகவலை வெளியாக்குமாறு தேவைப்படுத்தப்படும்போது தவிர,

(ஆ) இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்காகத் தவிர ; அல்லது

(இ) தனது கடமைகளைப் புரிகையில் அல்லது பணிகளை நிறைவேற்றுவதில் தவிர,

அத்தகைய ஏதேனும் தகவலை அவ்வாறு வெளியாக்கமாட்டாரென அத்தகைய வெளிப்படுத்துகைமூலம் உறுதிகூறுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் நிருவாகத்துடன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காக, அமைச்சருக்கு, அல்லது போரவைக்கு அல்லது அதன் குழுவெதற்கும் அல்லது பிரதிநிதி எவருக்கும், அல்லது பரிசோதகர் ஒருவருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு எவரேனுமாளினாலான ஏதேனும் தகவலின் வெளிவிடுகையானது, ஆக்கவுரிமையொன்றுக்காக அடுத்துப் பின்னர் செய்யப்பட்ட விண்ணப்பம் எதனையும் பாதித்தலாகாது.

*நிறுவனத்தின் பணியாட்டொகுதியின் உறுப்பினர் எவரினாலும் செய்யப்படும் கண்டுபிடிப்புகளிலும் புத்தாக்கப் புனைவுகளிலும் சீர்திருத்தங்களிலுமுள்ள உரிமைகள் நிறுவனத்துக்கு உரித்தாக்கப்படுதல்.*

40. (1) நிறுவனத்தின் அலுவலர் ஒருவரினால் செய்யப்படும் எல்லாக் கண்டுபிடிப்புகளிலும் புத்தாக்கப் புனைவுகளிலும் உள்ள உரிமைகளும் அத்துடன் படிமுறைகள், உபகரணங்கள், இயந்திரங்கள் தொடர்பிலான எல்லாச் சீர்திருத்தங்களிலும் உள்ள உரிமைகளும் நிறுவனத்திற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், நிறுவனத்தின் சொத்துவமாதலும் வேண்டும். அத்துடன் நிறுவனம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் அத்தகைய கட்டணங்களின் அல்லது அரசுரிமைப் பணங்களின் கொடுப்பனவுக்கும் அமைவாக, பொதுமக்களின் நலனுக்குப் பயன்படுத்தப்படுவதற்காக கிடைக்கக்கூடியதாக்கப்படுதலும் வேண்டும்.

(2) நிறுவனமானது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கண்டுபிடிப்பை, புத்தாக்கப் புனைவை அல்லது சீர்திருத்தத்தைச் செய்துள்ளவரான நிறுவனத்தின் அலுவலர் எவருக்கும் நிறுவனத்தின் நிதியத்திலிருந்து போவை தீர்மானிக்கக்கூடியவாறாக அத்தகைய மிகையூதியத்தைச் செலுத்தலாம் அல்லது அந்தக் கண்டுபிடிப்பில், புத்தாக்கப் புனைவில் அல்லது திருத்தத்தில் இருந்து பெறப்பட்ட இலாபங்களில் அத்தகைய அலுவலர் பங்குகொள்வதற்கு ஏற்பாட்டைச் செய்யலாம்.

(3) நிறுவனமானது, நிறுவனத்தின் அலுவலர் எவரினாலும் செய்யப்பட்ட எவையேனும் புத்தாக்கப் புனைவுகள் தொடர்பாக ஆக்கவுரிமைப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன், 1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, புலமைச்சொத்துச் சட்டக்கோவைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக புத்தாக்கம் புனைந்தவரின் ஒதுக்கீடாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*அரச ஆதனம் நிறுவனத்திற்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படுதல்.*

41. (1) அரசின் அசைவற்ற ஆதனம் எதுவும் நிறுவனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படுமிடத்து, அத்தகைய எவையேனும் நோக்கங்கள், அத்தகைய ஆதனத்தின் சிறப்பான அளிப்பொன்று அல்லது குத்தகையொன்று முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் எந்நோக்கத்திற்காகச் செய்யப்படக்கூடியதோ அல்லது கொடுக்கப்படக்கூடியதோ அந்நோக்கமொன்றாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், நிறுவனத்திற்குச் செய்யப்படும் அல்லது கொடுக்கப்படும் அத்தகைய ஆதனத்தின் சிறப்பான அளிப்பொன்றிற்கு அல்லது குத்தகையொன்றிற்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) அரசின் அசைவுள்ள ஆதனம் எதுவும் நிறுவனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படுமிடத்து, அமைச்சரானவர், அத்தகைய ஆதனம் எந்த அமைச்சுக்கு சொந்தமாகவுள்ளதோ அந்த அமைச்சின் அமைச்சரினது அல்லது அத்தகைய ஆதனத்தைத் தனதுடைமையில் வைத்திருப்பதான அமைச்சின் அமைச்சரின் சம்மதத்துடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் நிறுவனத்திற்கு கைமாற்றி உரித்தாக்கலாம்.

42. (1) நிறுவனமானது—

(அ) நிறுவனத்தின் வருமானம் அல்லது இலாபங்கள் மீதான வரியினதும்; அத்துடன்

(ஆ) நிறுவனத்தினால் அல்லது நிறுவனத்தின் சார்பில் அல்லது நிறுவனத்திற்காக எழுதி நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனத்தின் மீதான ஏதேனும் முத்திரைத் தீர்வையினதும்,

கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்டதாதல் வேண்டும். வரிகளிலிருந்தும் தீர்வைகளிலிருந்தும் விலக்களித்தல்.

(2) அமைச்சரானவர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட எவையேனும் பொருட்களின்மீதான சுங்கத்தீர்வை எதனதும் கொடுப்பனவிலிருந்து நிறுவனத்துக்கு விலக்களிக்கலாம்.

43. (1) அமைச்சரின் எழுத்திலான அங்கீகாரத்துடனன்றியும், (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவவன்றியும், ஆளெவரும் "கட்டளைகளின் நிறுவனம்" என்னும் சொற்களை "கட்டளைகள் நிறுவனம்" என்னும் சொற்களை அல்லது அத்தகைய ஆள் இலங்கைக் கட்டளைகள் நிறுவனமாயிருந்தார் அல்லது நிறுவனத்துடன் இணைந்திருக்கின்றார் அல்லது சம்பந்தப்பட்டிருக்கின்றார் என்பதை எச்சொற்களின் பயன்பாடு உட்கிடையாகக் கொண்டுள்ளதோ அத்தகைய வேறு சொற்களைக் கொண்ட ஏதேனும் பெயரின்கீழ் ஏதேனும் செயற்பாட்டை, தொழிலை, வியாபாரத்தை அல்லது தான்புரிதொழிலைக் கொண்டுநடாத்துதலாகாது. ஏதேனும் செயற்பாட்டை தொழிலை, வியாபாரத்தை அல்லது தான் புரிதொழிலைக் கொண்டுநடாத்தும் எவரேனும் ஆளினால் குறித்த சில சொற்கள் பயன்படுத்தப்படல்.

(2) அமைச்சரின் எழுத்திலான அங்கீகாரத்துடனும், (3) ஆம், (4) ஆம் உட்பிரிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவுமன்றி—

(அ) "நியமம்" என்ற சொல்லைக் கொண்டுள்ள வியாபாரக்குறி எதுவும், 1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டக்கோவைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படலாகாது;

(ஆ) ஆளெவரும் அதற்கென அனுமதிச்சீட்டு ஒன்றினால் அதிகாரமளிக்கப்பட்டிருந்தாலொழிய, "நியமம்" என்னும் சொல்லைக் கொண்ட குறியொன்றின்கீழ், அல்லது விற்பனைப்பொருள் அல்லது விளையுள் நிறுவனத்தினால் அதற்கென அங்கீகரிக்கப்பட்ட நியம அளவுக்குறிப்பீடொன்றுடன் இணங்கியொழுகுகின்றது என்ற கருத்தை உருவாக்கக்கூடியவாறான ஒரு முறையில் சொல்லப்பட்ட சொல் பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு விவரணத்தின்கீழ், ஏதேனும் விற்பனைப்பொருளை அல்லது விளையுள்ளை விற்பனை செய்தலாகாது.

(3) இச்சட்டம் தொடங்கும்போது ஏதேனும் செயற்பாட்டை, தொழிலை, வியாபாரத்தை அல்லது தான்புரிதொழிலைக் கொண்டுநடாத்துகின்றவரான அல்லது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளதான அத்தகைய ஏதேனும் பெயரின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளவரான ஆளெவரும், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் அத்தகைய செயற்பாட்டை, தொழிலை, வியாபாரத்தை அல்லது தான்புரிதொழிலைத் தொடர்ந்து கொண்டுநடாத்தலாம் அல்லது விடயத்திற்கேற்றுபோன்று அத்தகைய பெயரின்கீழ் தொடர்ந்து பதிவு செய்யப்படலாம்.

(4) இச்சட்டம் தொடங்கும்போது பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் வியாபாரக்குறியீட்டையோ அல்லது அத்தகைய ஏதேனும் வியாபாரக் குறியீட்டின்கீழான ஏதேனும் விற்பனைப் பொருளினது அல்லது விளைபுள்ளினது விற்பனையையோ (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பாதித்தலாகாது.

(5) அமைச்சரானவர், தெளிவின்மையை அல்லது துர்ப்பிரயோகத்தைத் தவிர்ப்பதற்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் அவரினால் கொடுக்கப்பட்ட ஏதேனும் அங்கீகாரத்தை மீளப்பெறுதல் அவரது அபிப்பிராயத்தில் அவசியமானதெனில், எந்நேரத்திலும் அவர் அவ்வாறு மீளப்பெறலாம்.

விற்பனைப் பொருட்களின் அல்லது விளைபுள்ளின் மாதிரிகளை அனுப்பிவைக்கும்படி அல்லது விற்பனைப் பொருள் அல்லது விளைபுள் பற்றிய தகவலை கொடுத்துதவும்படி தேவைப்படுத்தப்படும் போதெல்லாம் அவ்வாறு செய்தல் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளவர்களான ஆட்களின் கடமையாதல்.

44. இச்சட்டத்தின்கீழ் அனுமதிச் சீட்டொன்று வழங்கப்பட்டுள்ளவரான ஆளெவரும் அவருக்கு நிறுவனத்தினால் எழுத்திலான வேண்டுகோளொன்று செய்யப்பட்டதன் மேல்,—

(அ) அத்தகைய வேண்டுகோளில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலத்துக்குள் எந்த விற்பனைப்பொருள் அல்லது விளைபுள் தொடர்பாக அந்த அனுமதிச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் விற்பனைப்பொருளின் அல்லது விளைபுள்ளின் அவ்வாறு குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய மாதிரிகளைப் போவைக்கு அல்லது நிறுவனத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகைய வேண்டுகோளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள், அத்தகைய விற்பனைப்பொருள் அல்லது விளைபுள் பற்றி அல்லது அவற்றின் உற்பத்தி, தயாரிப்பு, பதனிடுகை அல்லது பரிகரிப்பு பற்றி அவ்வாறு குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகவலைப் போவைக்கு அல்லது நிறுவனத்தினால் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் ஆளுக்கு கொடுத்துதவுதல் வேண்டும்,

என்பதுடன் அத்தகைய ஆள் அத்தகைய வேண்டுகோளின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதலும் வேண்டும்.

தவறுகள்.

45. (1) (அ) பத்தொன்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் அல்லது (3) ஆம் உட்பிரிவின் அல்லது 23 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிச் சீட்டின் நிபந்தனைகளை மீறுகின்ற அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற; அல்லது

(இ) முப்பத்தொன்பதாம் பிரிவின் அல்லது 43 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற; அல்லது

(ஈ) ஒரு பரிசோதகரென பொய்யாகத் தன்னைக் காட்டிக் கொள்ளுகின்ற; அல்லது

(உ) ஏதேனும் முக்கியமான விபரத்தில் பொய்யானதாகவுள்ளதும் அது பொய்யானதென அவர் அறிந்துள்ளதுமான இயைபான கூற்றெதனையும் பரிசோதகர் ஒருவருக்குச் செய்கின்ற ; அல்லது

(ஊ) பரிசோதகர் ஒருவர், தனது தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அவரிடம் கேட்ட ஏதேனும் இயைபான வினாவுக்கு விடையளிக்க மறுக்கின்ற அல்லது தவறுகின்ற ; அல்லது

(எ) பரிசோதகர் ஒருவரால் செய்யப்பட்ட ஏதேனும் சட்டமுறையான பணிப்புக்கு இணங்கியொழுக மறுக்கின்ற அல்லது தவறுகின்ற ; அல்லது

(ஏ) பரிசோதகர் ஒருவர், அவரது தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதில் அவருக்கு இடைஞ்சலேற்படுத்துகின்ற அல்லது முட்டுக்கட்டையிடுகின்ற ; அல்லது

(ஐ) நாற்பத்தி நான்காம் பிரிவின்கீழான வேண்டுகோள் எதனுடனும் இணங்கியொழுகத் தவறுகின்ற,

ஆளெவரும் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஆளெவரும், (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள தவறொன்றிற்குக் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பின்—

(அ) தவறைப் புரிவதற்கு எதிரான நியாயமான எல்லா முற்காப்புக்களையும் அவர் எடுத்துள்ளாரெனவும் ; அத்துடன்

(ஆ) இருபத்திமூன்றும் பிரிவின்கீழான குற்றச்சாட்டு எந்த விற்பனைப் பொருள் அல்லது வினையுள் தொடர்பானதோ அந்த விற்பனைப் பொருளை அல்லது வினையுள்ளை எவ்வாளிடமிருந்து அவர் பெற்றுக்கொண்டாரோ அவ்வாள் பற்றி அவரிடம் கிடைக்கக்கூடியதாகவிருந்த அல்லது நியாயமாகக் கிடைக்கக்கூடியதாக இருந்திருக்க வேண்டிய எல்லாத் தகவலையும் பேரவையினால் அல்லது பரிசோதகரினால் கோரப்பட்டதன் மேல் அவர் கொடுத்துதவினாரெனவும்,

அவர் எண்பிப்பின், அத்தவறுக்கு அவர் குற்றவாளியல்லர் எனக் கருதப்படுதல் வேண்டும்.

46. (1) வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவையெப்படியிருப்பினும், இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியான ஆளொவ்வொருவரும், நீதிவானொருவரின் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல்— தண்டங்கள்.

(i) நாற்பத்தைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள தவறொன்றின் விடயத்தில், நாலாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது இரண்டு ஆண்டுகளிற்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ; அத்துடன்

(ii) நாற்பத்தைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியிலிருந்து (எ) என்னும் பந்தி வரையிலான பந்திகள் ஒவ்வொன்றிலும் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தவறொன்றின் விடயத்தில், இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது ஓராண்டிற்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும், அத்துடன்

(iii) நாற்பத்தைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தவறொன்றின் விடயத்தில், ஆயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும்,

ஆளாதல் வேண்டும்.

(2) ஆளெவரும், 45 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தவறொன்றிற்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படும் போதிலெல்லாம் அல்லது 43 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் மீறுகையொன்றிற்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படும் போதிலெல்லாம், நீதிமன்றமானது, அது விதிக்கக்கூடியவாறான வேறு ஏதேனும் தண்டத்துடன் மேலதிகமாக, எந்தப் பண்டங்கள் தொடர்பாகத் தவறு புரியப்பட்டதோ அப்பண்டங்கள் எல்லாம் அல்லது அப்பண்டங்களில் ஏதேனும் பாகம் அரசிற்கு இழப்பிக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம் என்பதுடன், இழப்பிக்கப்பட வேண்டுமென அல்லது கட்டளையிடப்பட்ட பண்டங்கள் அமைச்சர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் கையுதிர்க்கப்படுதலும் வேண்டும்.

ஆட்கள் குழுக்களினாலான தவறுகள்.

47. இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது

(அ) அக்குழுவானது, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒவ்வொருவரும் அத்தவறிற்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும், அத்துடன்

(ஆ) அக்குழு ஒரு குழுமமொன்றாயிருப்பின், அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும் அத்தவறிற்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பணிப்பாளர் எவரும் தவறு அவரது அறிவின்றியே புரியப்பட்டுள்ளதென அல்லது தவறு புரியப்படுதலைத் தடுப்பதற்கு எல்லா உரிய விழிப்புக் கவனத்தையும் அவர் பிரயோகித்தாரென அவர் எண்பிப்பாரெனின், இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

ஒழுங்கு விதிகள்.

48. (1) இச்சட்டத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காகவும், அவற்றிற்குப் பயன் கொடுக்கும் நோக்கத்திற்காகவும், அத்துடன் எக்கருமங்கள் தொடர்பாக இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் அமைச்சரானவர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் இயன்றளவு விரைவாக, அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அதன்கீழ் செய்யப்பட்ட எதனதும் வலிதுடைமைக்குப் பங்கமின்றி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

நீக்கமும் பேணல்களும்.

49. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்து நான்காம் ஆண்டின் 38 ஆம் இலக்க, இலங்கைக் கட்டளைகள் பணியகச் சட்டமானது இத்தால் நீக்கப்படுகின்றது.

(2) முற்போந்த சட்டத்தின் நீக்கத்தைப் பொருட்படுத்தாது—

(அ) பணியகத்தின் சேவையிலுள்ள எல்லா அலுவலர்களும், சேவையாளர்களும் நிறுவனத்தின் அலுவலர்களாகவும் சேவையாளர்களாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், பணியகத்தின் சேவையில் அவர்கள் துய்த்திருக்கக்கூடியவாறான, கிட்டத்தட்ட அதே தராதரத்திலும் அதே நியதிகளின் மீதும் நிபந்தனைகளின் மீதும் அவர்களது பதவிகளை வகித்தலும் வேண்டும் ;

(ஆ) பணியகத்தினால், பணியகத்துடன் அல்லது பணியகத்திற்காக உறப்பட்ட எல்லாத் தனிசுகளும், கடப்பாடுகளும், பொறுப்புக்களும், நிறைவேற்றப்பட்ட அல்லது செய்துகொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் அத்துடன் செய்யப்படுவதற்கென ஈடுபடப்பட்ட எல்லாக் கருமங்களும் விடயங்களும், இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக, நிறுவனத்தினால், நிறுவனத்துடன் அல்லது நிறுவனத்திற்காக உறப்பட்ட, நிறைவேற்றப்பட்ட, செய்யப்பட்ட அல்லது செய்யப்படுவதற்கென ஈடுபடப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக பணியகத்தினால் அல்லது பணியகத்திற்கெதிராகத் தொடரப்பட்ட அல்லது தொடரப்பட்டிருக்கக்கூடியதான எல்லாத் தொடர்ச்சிகளும், குற்ற வழக்குகளும், வேறு சட்ட நடவடிக்கைகளும் நிறுவனத்தினால் அல்லது நிறுவனத்திற்கெதிராகத் தொடர்ந்து நடாத்தப்படுதல் அல்லது தொடரப்படுதல் வேண்டும் ;

(ஈ) பணியகத்தின் சார்பாக அல்லது பணியகத்திற்கு எதிராக, தகுதி வாய்ந்தவொரு நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட எல்லாத் தீர்வைகளும் அல்லது கட்டளைகளும் நிறுவனத்தின் சார்பாக அல்லது நிறுவனத்திற்கு எதிராக ஆக்கப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(உ) பணியகத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அல்லது பணியகத்தினால் சட்டமுறையாகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ள அல்லது கொள்ளப்பட்டுள்ள அல்லது பணியகத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள அல்லது பணியகத்தின் கையுதிர்ப்பில் வைக்கப் பட்டுள்ள அல்லது பணியகத்திற்கு வேறு ஏதேனும் முறையில் கைமாற்றப்பட்டுள்ள அல்லது பணியகத்தின் உடைமையில் உள்ள அல்லது கட்டுப்பாட்டிலுள்ள அசைவுள்ளனவையான அல்லது அசைவற்றவையான எல்லா ஆதனங்களும், நம்பிக்கைப்பொறுப் புக்களுக்கு, விதிப்பனவுகளுக்கு, பொறுப்புக்களுக்கு, ஒதுக்கீடு களுக்கு, வசதியுரிமைகளுக்கு அல்லது வேறு பாரபந்தங்களுக்கு அமைவாகவும் அவற்றைச் சார்ந்துள்ளவையாய் அவற்றுடன் இணைந்துள்ளவையாய் அல்லது அவற்றிற்கு ஏற்புடையனவாய் உள்ள நியதிகளினதும் நிபந்தனைகளினதும் மீதும், நிறுவனத் தினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும் அல்லது நிறுவனத்திற் காக நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டும் ;

(ஊ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று வலுவிலிருப்பவையும் இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதவையாக இல்லாதவையு மான எல்லா ஒழுங்குவிதிகளும் இச்சட்டத்தின் கீழாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என் பதுடன் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளினால் அதற்கிணங்கத் திருத்தப்படலாம், அவற்றிற்குச் சேர்க்கப்பட லாம் அல்லது அவை நீக்கப்படலாம் ; அத்துடன்

(எ) நீக்கப்பட்ட சட்டத்தின் 31 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பணி யகத்தின் நிதியமானது, இச்சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட நிறுவனத்தின் நிதியத்தின் பாகமாக அமைவதாகக் கருதப்படு தல் வேண்டும்.

பொருள்கோடல்.

50. இச்சட்டத்தில், சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினு லன்றி—

"சான்றுப்படுத்தல் குறி" என்பது, 17 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரி வின்கீழ் சான்றுப்படுத்தல் குறியொன்றாக இருப்பதற்கு வெளிப் படுத்தப்பட்ட குறியொன்றெனப் பொருள்படும் ;

"வழக்காறு நெறி" என்பது ஏதேனும் சாமானினது, உபகரணத் தினது, கருவியினது, உபாயத்தினது அல்லது பதனிடுகையினது நிருமாணம், நிறுவுகை, சோதனை, தொழிற்பாடு அல்லது பயன் பாடு சம்பந்தமாக இடப்படவேண்டிய முறைகள் பற்றிய அல்லது கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறை பற் றிய விதிகளின் தொகுதியொன்றெனப் பொருள்படும் ;

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, நிறுவனத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும் ;

"பரிசோதகர்" என்பது, 29 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பரிசோதகர் ஒருவர் எனப் பொருள்படும்;

"குறி" என்பது ஏதேனும் உபாயத்தை, வகையை, தலைப்பை, சுட்டுத் துண்டை, சீட்டை, வரைதற்குறிப்பை, பெயரை, ஒப்பத்தை, படைப்பை, எழுத்தை, எண்ணை அல்லது அவற்றின் ஏதேனும் சேர்க்கையை உள்ளடக்கும்;

"விற்பனை செய்தல்" என்பது, விற்பனை செய்வதற்காக வெளிக்காட்டுதலை அல்லது முனைதலை அல்லது விற்பனைசெய்யும் நோக்கத்திற்காக ஏற்றுமதி செய்வதில் அல்லது விற்பனைசெய்யும் அல்லது ஏற்றுமதிசெய்யும் நோக்கத்திற்காக அல்லது வியாபாரம் செய்யும் அல்லது உற்பத்திசெய்யும் ஏதேனும் நோக்கத்திற்காக உடைமையில் வைத்திருத்தலை உள்ளடக்கும்;

"அளவுக்குறிப்பீடு" என்பது, ஏதேனும் விற்பனைப்பொருளின் இயல்பு, தன்மை, வலு, தூய்மை, சேர்க்கை, அளவு, அளவுப் பரிமாணங்கள், நிறை, தரம், பாவனைத்திறன், தோற்றம், தொன்மை அல்லது வேறு பண்பியல்புகள் என்பவற்றைக் குறிப்பீடு செய்வதன் மூலம் ஏதேனும் விற்பனைப்பொருள் அல்லது விளையுள் எந்தப் பொருட் கூறிலிருந்து அல்லது பதார்த்தத்திலிருந்து அல்லது எந்தப் பொருட்கூறுடன் அல்லது பதார்த்தத்துடன் அல்லது எம்முறையில் உற்பத்தி செய்யப்படலாமோ, தயாரிக்கப் படலாமோ, பதனிடப்படலாமோ அல்லது பரிகரிக்கப்படலாமோ அந்தப் பொருட்கூறின் அல்லது பதார்த்தத்தின் அல்லது அந்த முறையின் விவரணம் ஒன்று எனவும் பொருள்படும்; அத்துடன்

"நியம அளவுக்குறிப்பீடு" என்பது நிறுவனத்தின் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட அளவுக் குறிப்பீடு ஒன்று எனப் பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200: ஒவ்வோராண்டும், திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம், அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.